**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் காசு மீதியில் ரூபா 1,904,453 வங்கி மேலதிகப் பற்று ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளுகின்றோம். முன்னைய ஆண்டு சீராக்கமாக 2020 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம இலக்கம் 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு முரணாக பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 905,940 செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக இனங்காண்பதற்கு பதிலாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 61,430,740 தொகை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் தனியாக காட்டுவதற்கு பதிலாக முதலீட்டு காசுப்பாய்ச்சலுடன் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளுகின்றோம். முன்னைய ஆண்டு சீராக்கமாக 2020 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள் வகுப்பிற்குரிய ஒரு சொத்தொன்று | ஏற்றுக்கொள்ளுகின்றோம். முன்னைய ஆண்டு சீராக்கமாக 2020 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை | நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்களின் வகுப்புக்குரிய சொத்தொன்று மீள் |

| | | | |
|---|---|---|---|
| | மீள்மதிப்பீடு செய்து அதிகரிப்பு அல்லது குறைவடைதல், ஏனைய சொத்து வகுப்புக்களின் பெறுமதிக்கு ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் தொலைபேசி இணைப்புக்கள், நிரந்தர இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கு உரிய கூட்டுமொத்தமாக ரூபா 11,424,009 மீள்மதிப்பீட்டு பற்றாக்குறை உரிய சொத்து வகுப்பு கவனத்தில் கொள்ளப்படாது ஈடுசெய்யப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி அதிகரிப்பு அல்லது குறைவு ஏனைய சொத்துக்களின் பெறுமதிக்கு ஈடுசெய்யாதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பிரகாரம் குறித்த நலன் கடப்பாடுகளின் (சொத்துக்கள்) தேறிய பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 15,637,414 தொகையான பணிக்கொடை முதலீடுகள் மற்றும் பணிக் கொடைக்கான ஒதுக்கீடுகள் ரூபா 39,776,194 தொகை நிதி நிலைமைக் கூற்றில் தனியாக காண்பிக்கப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவகத்தின் தேறிய குறித்த நலன் கடப்பாடுகள் ரூபா 24,138,780 தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்ளுகின்றோம். முன்னைய ஆண்டு சீராக்கமாக 2020 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம இலக்கம் 19 இன் பிரகாரம் குறித்த நலன் கடப்பாடுகளின் (சொத்துக்கள்) தேறிய பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது சுற்றுலாத்துறை பொலிஸ் பிரிவிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,192,000 தொகை கிடைக்கப் பெறாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்கு தேவையான சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டு விருப்பத்தை பெற்று நிதிக்கூற்றுக்களில் 2021 இன் போது சீராக்கப்படும். | கிடைக்கப் பெறாத வருமானங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய கணக்குகள் | 3,267,191 | 6,512,810 | 3,245,619 | இந்த நிறுவகத்தின் மீதி தற்போது இணக்கம் செய்யப்படுவதுடன் 2021 இன் போது இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக பரீட்சித்து தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய கணக்குகள் | 0 | 8,653,724 | 8,653,724 | இந்த நிறுவன மீதி தற்போது இணக்கம் செய்யப்படுவதுடன் 2021 இன் போது இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 26,244,031 ஆகும். எனினும் 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு கடன்பட்டோரினதும் மீதி உறுதிப்படுத்தல் பெறப்படாதிருந்ததுடன் கடன்பட்டோருக்காக அறவிடமுடியாக் கடன் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 13,949,000 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டதுடன் அது மொத்த கடன்பட்டோரில் 53 சதவீதமாகும். அதனிடையே அறவிடும் நடவடிக்கைகளுக்காக ஒரு கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,068,000 பெறுமதி தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். நீண்ட காலமாக இருந்த நிலுவையை பரீட்சிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சபை மாதாந்த செயல்முன்னேற்றத்தை பரீட்சிக்கின்றது. அதில் நீண்டகாலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 5,140,571 மீதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குரியதாக இருந்ததுடன் ரூபா 1,118,000 இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு உரியதாகும். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் என்பவற்றுக்குரிய பெறுமதி இணக்க செயற்பாடுகளின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. மொத்த நிலுவையில் முன்னைய அமைச்சரின் அலுவலகத்திற்குரிய அண்மித்த ஆண்டின் ரூபா 1.4 மில்லியனாக இருந்ததுடன் எங்களால் தற்போது சுற்றுலாத்துறை அமைச்சருக்கு பெறுமதியை அறவிடல் தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. 2021 இன் போது இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஐயக் கடன் கொள்கை அமுல்படுத்த வேண்டியதுடன் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 39(1) ஆம் உப பிரிவு | அமைச்சரிடம் ஆலோசனை பெற்று கல்விசார் சபையொன்றை நியமிப்பதற்கு 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அமைச்சரிடம் ஆலோசனை பெற்று கல்விசார் சபையொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 6.5.1 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 306 நாட்கள் தாமதத்துடன் 2021 சனவரி 01 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ii) | 6.5.3 ஆம் பிரிவு | 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நிறுவகம் 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த உப கட்டுநிதி பெறப்பட்டு அதன் பணி முடிவடைந்தவுடன் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 54 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,100 தொகை முதல் ரூபா 500,000 வரையான வீச்சில் செயல்நிமித்த உப கட்டுநிதியை தீர்ப்பதற்காக 16 நாட்கள் முதல் 467 நாட்கள் வரையான காலவீச்சினை எடுத்திருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர் பணிகள் முடிவடைந்தவுடன் தீர்க்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,983,966 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 150,814,061 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 152,798,027 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் புறப்படுகை வரி வருமானங்கள் ரூபா 109,521,464 இனால் குறைவடைந்தமையும், செலவினங்கள் ரூபா 94,915,533 இனால் அதிகரித்தமையும் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது தகவல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 3,771,216 செலவினமொன்று | ரூபா 2,262,730 அளவில் மென்பொருள் முறைமைக்காக செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி | நிறுவனத்தின் தேவையுடன் ஈடுகொடுக்கின்ற பிரகாரம் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் தேவையுடன் இணங்காமையின் காரணமாக அமுல்படுத்தும் போது அது வெற்றியளித்திருக்கவில்லை. எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,508,486 தொகை 2009.12.31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி 2020 இன் நிதிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது. நிறுவகம் 2021 இன் போது இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது. | முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் போது அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற வாகனத்தின் உரித்தை கையேற்பதற்கு 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வாகனத்தின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சமுத்திரா ஹோட்டலின் வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக ஹோட்டல் இரவு அறைகள் 2,555 காணப்பட்ட போதிலும் 479 இரவு அறைகள் மாத்திரமே அதாவது 19 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | அறைகளை உச்ச இயலளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 217 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 193 ஆகும். அதன் பிரகாரம் 24 பதவிகளில் வெற்றிங்கள் காணப்பட்டன. அதில் பிரதான பதவியான பிரதி பணிப்பாளர் நாயகம் (கல்விசாரா), பணிப்பாளர் (வர்த்கம்), 05 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள் மற்றும் ஒரு உதவி விரிவுரையாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 06 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 03 செயற்பாடுகள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 10 செயற்பாடுகளுக்காக ஆண்டின் போது 50 சதவீதத்தை விட குறைவான நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |